SriLankan Airlines

oneworld

**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை

**கொள்முதல் இல : COM/WL/RFP/23/02**

**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் (SLA) இடமிருந்து அகலமான உடற்பகுதி விமானம் இரண்டை (2) விமானத்திற்கான செயற்பாட்டுக் குத்தகை (Wet Leasing) முறையில் ஆறு (06) மாதங்களுக்குப் பெறுவதற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சார்பில் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சினது அமைச்சக கொள்முதல் சபையின் தலைவரால் தகுதியும் தகைமையும் உள்ள தரப்பினரிடமிருந்து wet lease முறையில் இரண்டு (02) பொருத்தமான ஒத்த வடிவமைப்பிலான (sister-ship) விமானங்களை ஆறு (6) மாதங்களுக்குப் பெறுவதற்கான ஏலக்கோரலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறித்த "முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)" இல் உரிய விபரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, இதனை இலங்கை விமான நிறுவனத்தினது உத்தியோகபூர்வ இணையத்தளமான **https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices** இல் 2023 செப்டெம்பர் 25 முதல் காணக்கூடியதாக உள்ளது.

ஏலமானது இலங்கை அரசாங்கத்தின் கொள்முதல் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சர்வதேச போட்டித்தன்மை ஏலம் (ICB) கொள்முதல் முறையில் முன்னெடுக்கப்படும். சாத்தியமுள்ள விமானங்களை wet lease முறையில் வழங்குவதற்கு சட்ட உரிமைகளைக் கொண்டுள்ள அனைத்து ஆர்வமுள்ள தகுதியான ஏலம் கேட்பவர்களும் தங்களது ஏலக் கோரல்களை **revenuemanagement@srilankan.com** என்ற பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரிக்கு RFP மேற்கோள் (COM/WL/RFP/23/02) இனைக் குறிப்பிட்டு 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதி இலங்கை நேரம் 14.00 (GMT + 0530) க்கு முன்பதாக அனுப்பி வைத்தல் வேண்டும் (ஏலக் கோரல்களுக்கான காலக்கெடு).

RFP உடன் இணைக்கப்பட்டுள்ள ஏலக்கோரல் ஏற்றுக்கொள்ளல் படிவமானது முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு, கையொப்பத்துடன் **rminfo@srilankan.com** இற்கு மின்னஞ்சல் ஊடாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும். RFP குறித்த ஏதேனும் விசாரணைகள் அல்லது ஐயப்பாடுகளை **rminfo@srilankan.com** என்ற அதே மின்னஞ்சல் முகவரிக்கு 2023 ஒக்டோபர் 04 அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறித்த RFP இற்கான பிற்சேர்க்கை ஒன்றில் மாற்றம் குறிப்பிடப்பட்டாலன்றி 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதி இலங்கை நேரம் 1415 மணிக்கு (GMT + 0530) இலத்திரனியல் முறையில் ஏலக் கோரல்கள் ஆரம்பிக்கப்படும். தாமதமான ஏலக்கோரல்கள் நிராகரிக்கப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் தரப்பினர், ஏலம் ஆரம்பிக்கும் திகதிக்கு மூன்று (3) நாட்களுக்கு முன்பு தங்கள் விருப்பத்தை **rminfo@srilankan.com** இற்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

RFP குறித்த ஏதேனும் திருத்தங்கள் / அறிவிப்புகளை இலங்கை விமான நிறுவனத்தினது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**அமைச்சக கொள்முதல் சபை**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை.**